# 2015 தேர்தலுக்கு மாறாக கடந்த தேர்தலில் மேலும் அதிகமான வாக்காளர்கள் தங்கள் தெரிவை மாற்றி எதிர்த்தரப்புக்கு வாக்களித்தனர்: கருத்தாய்வு

*செய்தி,* 8 அக்டோபர் 2020

சிங்கப்பூரில் 2015-ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு மாறாக அண்மைய பொதுத்தேர்தலில் மேலும் அதிகமான வாக்காளர்கள் தங்கள் தெரிவை மாற்றி மக்கள் செயல் கட்சிக்குப் பதிலாக எதிர்த்தரப்புக்கு வாக்களித்ததாகத் தெரியவந்துள்ளது.

பொதுத்தேர்தலுக்கு பிறகு கொள்கை ஆய்வுக் கழகம் நடத்திய கருத்தாய்வு முடிவுகள் அதனைக் காட்டின.

கருத்தாய்வின்படி,

மக்கள் செயல் கட்சியிலிருந்து எதிர்த்தரப்புப் பக்கம் மாறி வாக்களித்தவர்கள் - 8%

எதிர்க்கட்சிகளுக்கு பதிலாக மக்கள் செயல் கட்சிக்கு வாக்களிக்க முடிவு செய்தவர்கள் - 3%

இருப்பினும், அதன் தொடர்பான கேள்விகளுக்குக் குறைவானோரே பதிலளித்ததாகக் கூறப்பட்டது.

கருத்தாய்வில் பங்கேற்ற 2,000க்கும் மேற்பட்டோரில் 56 விழுக்காட்டினர் தங்களின் கட்சித் தெரிவைக் குறிப்பிடவில்லை.

2015-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கருத்தாய்வின் முடிவுகளுடன் ஒப்பிடுகையில் நிலைமை முற்றிலும் மாறுபட்டுள்ளது என்று கூறப்பட்டது.

அப்போது அரசியல் கட்சித் தெரிவை மாற்றிய வாக்காளர்கள் பலர் எதிர்க்கட்சிகளுக்கு பதிலாக மக்கள் செயல் கட்சிக்கு வாக்களித்தனர்.